சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **155 / 2019**

பெயர்: வீரப்பன் வா.சா. 1 தேதி **06.01.2025**

குறுக்கு விசாரணை

முதல் பிரதிவாதி எனது சகோதரர். இரண்டு பிரதிவாதி, முதல் பிரதிவாதியின் மனைவி. எனது தாயார் பெயர் கன்னியம்மாள். அவர் தற்பொழுது உயிருடன் உள்ளார். எனது தகப்பனார் பள்ளியப்பன் 2017ம் ஆண்டில் இறந்துபோனார். எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள் இருந்து , இறந்துபோயிவிட்டார்கள். எனது உடன் பிறந்த சகோதரிகள் மூன்று பேர்கள் உண்டு, முறையை விஜயலட்சுமி, சரோஜா, தேன்மொழி. மேற்படியார்கள் மூவருமே எனக்கு மூத்தவர்கள். அவர்கள் தற்பொழுது உயிருடன் உள்ளார்கள். நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள சொத்துவிவரத்தில் கண்டுள்ள 5 முதல் 17 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சொத்துகள் பூர்விக சொத்துகள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை பொறுத்து எனக்கு எனது உடன்பிறந்தவர்களும் இடையே பாகபிரிவினை நடைபெறவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களையும் பாகம்பிரிக்கவேண்டும் என எனது உடன் பிறந்தவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி என் உடன் பிறந்தவர்கள் என்னிடம் எனது தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டே கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். வழக்கில் கோரியுள்ள தாவா சொத்தான சர்வே எண்.294/1ல் கட்டுப்பட்ட சொத்தானது ஏனைய பூர்விக சொத்துக்களில் இருந்து கிடைக்கபெற்ற வருமானத்தை கொண்டு தான் கிரையம் பெறப்பட்டதா அவ்வாறு தான் கிரையம் பெறப்பட்டது. எனது தாயார் மற்றும் உடன் பிறந்த சகோதரிகளை தரப்பினராக சேர்க்காததால் வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.